# வருடாந்த அறிக்கை 2015



இலங்கை தேசிய நீரியல்வாழ்

உயிரினச் செய்கை அபிவிருத்தி

அதிகார சபை

NAQDA

# வருடாந்த அறிக்கை

## *2015*

இலங்கை தேசிய நீரியல்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி

அதிகார சபை

41/1 புதிய பாராளுமன்ற வீதி,

பலவத்த,

பத்தரமுல்ல.

**தொலைபேசி இலக்கம் : 011 2786495**

**பெக்ஸ் இலக்கம் : 011 2786493**

இலங்கை தேசிய நீரியல்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை
41/1, புதிய பாராளுமன்ற வீதி,
பலவத்த,
பத்தரமுல்ல.

2017.04.20.

கௌரவ கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர்
கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு
மாளிகாவத்தை,
கொழும்பு - 10.

ஐயா!

1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், 2015 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக நிறுவகத்தின் செயற்பாடுகள் தொடர்பாக கீழ் குறிப்பிடப்பட்ட அறிக்கையினை சமர்ப்பிக்கிறேன்.

- தலைவரின் மீளாய்வு
- பணிப்பாளர் சபையின் அறிக்கை
- வருமான வெளிப்பாடுகள்
- ஐந்தொகை
- கணக்காய்வாளர் அறிக்கை

நம்பிக்கையுள்ள

**சட்டத்தரணி உபாலி மொகட்டி**
தலைவர

# நிறுவனம்சார் தகவல்கள்

**நிறுவனத்தின் பெயர்**

இலங்கை தேசிய நீரியல்வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

**பணிப்பாளர் சபை**

| | | |
|---|---|---|
| 1. | சட்டத்தரணி உபாலி மொகட்டி | - தலைவர் |
| 2. | திரு. கே.ஜீ.ஏ. குணரத்ன | - பணிப்பாளர் |
| 3. | திரு.டப்.ஐ. தீபால் பீரிஸ் | - பணிப்பாளர் |
| 4. | சட்டத்தரணி பீ.பி.ஆர். வீரகோண் | - பணிப்பாளர் |
| 5. | திரு. நெல்சன் டப். அபேகுணவர்தண | - பணிப்பாளர் |
| 6. | கலாநிதி. அனில் பிரேமரட்ண | - பணிப்பாளர் |
| 7. | ஜனாப். அப்துல் மஜித் | - பணிப்பாளர் |
| 8. | திரு. எம்.சி.எல். பர்னாந்து | - பணிப்பாளர் |
| 9. | திருமதி. கிரன்சா களுதந்திரி | - பணிப்பாளர் |
| 10. | திரு. ஏ.எச். ஹந்துன்கேவா | - பணிப்பாளர் |

**பிரதான அலுலவகம்**

41/1, புதிய பாராளுமன்ற வீதி, பெலவத்த, பத்தரமுல்ல

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் திணைக்களம்

**வங்கியாளர்**

மக்கள் வங்கி, பத்தரமுல்ல

இலங்கை வங்கி, பெலவத்த

# தலைவரின் மீளாய்வு

2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக இலங்கை தேசிய நீரியில்வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கையினை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

## அறிமுகம்

இலங்கை தேசிய நீரியல் வாழ் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபை 2015 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமான 12 மாத கால எல்லைக்குள் கடந்த ஆண்டுகளைப் போன்று செயற்சாதனையில் முன்னேற்றங்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**நன்னீர் மீன் உற்பத்தி**

**அட்டவணை 1 - கடந்த ஆண்டுகளில் நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல்வாழ் செய்கை உற்பத்திகள்**

| ஆண்டு | நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கை உற்பத்தி (மெ.தொ) | கரையோர நீரியல் வாழ் செய்கை மூலம் இறால் உற்பத்தி (மெ.தொ) | மொத்த உற்பத்தி (மெ.தொ) | கடந்த ஆண்டை விட உற்பத்தி அதிகரிப்பு விகிதாசாரமாக (%) |
|---|---|---|---|---|
| **2008** | 42,270 | 2,220 | 44,490 | 16 |
| **2009** | 43,010 | 3,550 | 46,560 | 2 |
| **2010** | 48,930 | 3,480 | 52,410 | 13 |
| **2011** | 55,410 | 4,150 | 59,560 | 14 |
| **2012** | 65,640 | 3,310 | 68,950 | 16 |
| **2013** | 62,480 | 4,430 | 66,910 | -3 |
| **2014** | 70,600 | 5,150 | 75,750 | 13 |
| **2015** | 60,210 | 7,090 | 67,300 | -11 |

2015 ஆம் ஆண்டில் நன்னீர் கடற்றொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை மீன் உற்பத்தி 67,300 மெற்றிக் தொன் என்பதுடன், இது இலக்காகக் கொள்ளப்பட்ட மீன் உற்பத்தியை விட 79% அதிகரிப்பாகும். 2015 ஆம் ஆண்டில் நிலையான நீர்த்தேக்கங்களில் செய்கையை அடிப்படையாகக் கொண்டு கடற்தொழில் கைத்தொழிலின் மூலம்பெற்ற மீன் உற்பத்தி 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது குறைவடைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் காணப்பட்ட பாதிப்புமிக்க காலநிலை காரணமாக நீர்த்தேக்கங்களில் உயரிய நீர்த்தேக்கம் காணப்பட்ட காலம் அதிகரித்ததுடன் இதனால் மீன் நீர்த்தேக்கங்களில் காணப்படும் இறந்த தாவரப் பகுதிகளுக்கிடையே விரிவடைந்துள்மையினால் மீனவர்களுக்கு மீன்பிடி வலைகளை விரிப்பதற்கு முடியுமான பிரதேசங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்பட்டமையும் 2014 ஆம் ஆண்டில் நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சிகளையும் இடப்படும் அளவு குறைவும் நன்நீர் மீன் உற்பத்தி குறைவடைவதற்குக் காரணமாக அமைந்தது. நன்நீர் மீன் உற்பத்தியை மேம் படுத்துவதற்காக மீன் குடம்பிகள் மற்றும் நன்நீர் இறாலுக்குப் பின்னர் குஞ்சிகளை நீர் நிலைகளில் இடும் அளவு அதிகரிப்பு, சமூக பங்கேற்புடன் நீர் நிலைகளில் முகாமைத்துவம், மீன் குஞ்சி உற்பத்தியை அதிகரித்தல் போன்றவற்றிக்காக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலும் நன்னீர் இறால் செய்கையினைப் பரவலாக்கல், சிறந்த முகாமைத்துவப்

பழக்கங்களைப் பின்பற்றுவதன் மூலம் மீள் கட்டுப்பாட்டு முறைகள் ஊடாக நன்னீர் இறால் உற்பத்தி இவ்வாண்டில் 38% தினால் அதிகரித்துள்ளது.

**அந்நிய நாட்டுச் செலவாணி உழைப்பு மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான பங்களிப்பு**

2015 ஆம் ஆண்டின் நன்னீர் மீன் மற்றும் இறால் உற்பத்தி ரூபா 13,640 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் கிராமிய பொருளாதாரத்திற்கு அதிக உயரிய பங்களிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் செய்கை மேற்கொள்ளப்பட்ட இறால் மற்றும் அலங்கார மீன் ஏற்றுமதியினூடாக தொடராக ரூபா 1,971 மில்லியன் மற்றும் 2,392 மில்லியன் அந்நிய நாட்டுச் செலாவணி உழைக்க முடிந்துள்ளது..

**மீன் குஞ்சு உற்பத்தி மற்றும் விநியோகம்**

2015 ஆம் ஆண்டின் உடவலவை, தம்புள்ள, இகினியாகல, பொலன்னறுவை, இரணைமடு மற்றும் நுவரெலியா நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்ட மீன் குடம்பிகளின் எண்ணிக்கை 88.31 மில்லியன்களாகும். இக்குடம்பிகளில் கூடுதலாக மீன் குஞ்சுகள் வரை விருத்தி செய்வதற்காக தனியார் வாவிகள் மற்றும் சமூகம்சார் அமைப்புக்களினால் முகாமைத்துவம் செய்யப்படும் மீன் சினை உற்பத்திப் பிரிவிற்காக வழங்கப்பட்டுள்ளது. இது 2014 ஆம் ஆண்டில் மீன் குடம்பி உற்பத்தியுடன் ஒப்பீடு செய்யும் போது 16% வளர்ச்சியைக் காண்பிக்கின்றது.

அட்டவணை - 2 - குடம்பி உற்பத்தி மற்றும் விநியோகம் (2009 – 2015) (மில்லியன்)

| உற்பத்தி அலகுகள் | ஆண்டு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| **சமூகம்சார் அமைப்பினூடாக மீன் உற்பத்தி அலகிற்காக** | 17.34 | 15.79 | 17.55 | 10.85 | 12.52 | 6.57 | 11.90 |
| **நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மீன் குஞ்சு உற்பத்திக்காக** | 13.32 | 16.14 | 28.80 | 40.05 | 62.74 | 55.39 | 50.79 |
| **தனியார் வாவி உரிமையாளர்களுக்காக** | 17.99 | 26.31 | 34.88 | 24.39 | 21.94 | 11.93 | 15.67 |
| **கூடுகளுக்காக** | 1.35 | 2.30 | 1.88 | 1.11 | 0.84 | 2.02 | 9.95 |
| **மொத்தம்** | **50.00** | **60.54** | **83.11** | **76.40** | **98.04** | **75.91** | **88.31** |

**மீன் குஞ்சு உற்பத்தி**

2015 ஆம் ஆண்டின் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், சமூகம்சார் மீன் உற்பத்தி அலகுகள் மற்றும் தனியார் வாவிகளில் மீன் குஞ்சுகள் 55.21 மில்லியன் உற்பத்தி

செய்யப்பட்டன. இது 2014 ஆம் ஆண்டு மீன் குடம்பி உற்பத்தியுடன் ஒப்பீடு செய்யும்போது 35% வளர்ச்சியைக் காண்பிக்கின்றது.

அட்டவணை 3 - மீன் குடம்பி உற்பத்தி (2009 – 2015) (மில்லியன்)

| உற்பத்தி அலகுகள் | ஆண்டு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | **2009** | **2010** | **2011** | **2012** | **2013** | **2014** | **2015** |
| **சமூகம்சார் அமைப்பினூடாக மீன் உற்பத்தி அலகிற்காக** | 8.14 | 8.03 | 8.47 | 5.63 | 5.76 | 4.27 | 7.24 |
| **நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் மீன் குஞ்சு உற்பத்திக்காக** | 9.62 | 13.75 | 20.35 | 21.18 | 34.94 | 30.94 | 39.65 |
| **தனியார் வாவி உரிமையாளர்களுக்காக** | 8.99 | 11.70 | 14.89 | 9.87 | 8.43 | 4.81 | 6.06 |
| **கூடுகளுக்காக** | 1.18 | 1.40 | 1.11 | 0.71 | 0.26 | 0.96 | 2.26 |
| **மொத்தம்** | **27.93** | **34.88** | **44.82** | **37.39** | **49.39** | **40.98** | **55.21** |

**மீன் குஞ்சு விநியோகம்**

நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம், தனியார் வாவி, சமூகம்சார் மீன் உற்பத்தி அலகுகள் மற்றும் கூடுகள் மூலம் 2015 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட மீன் குஞ்சுகள் நீர் நிலைகளில் இடப்பட்டமை தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டில் கூடுதலான மீன் குஞ்சுகள் அளவு இடப்பட்டதன் மூலம் 2016 ஆம் ஆண்டில் நன்னீர் கடற்தொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை மீன் உற்பத்தி அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளது.

அட்டவணை 4 - மீன் குஞ்சுகளை இடல் - 2015

| நீர் நிலைகளின் வகைகள் | நீர்நிலைகளின் எண்ணிக்கை | மீன் குஞ்சுகள் இடப்பட்டமை (மில்லியன்) |
|---|---|---|
| **பாரிய நீர் நிலைகள்** | 32 | 11.70 |
| **நடுத்த அளவு நீர் நிலைகள்** | 66 | 16.30 |
| **சிறிய அளவு நீர் நிலைகள்** | 257 | 15.94 |
| **பருவகால நீர் நிலைகள்** | 453 | 7.07 |
| **வாவிகள்** | 654 | 2.01 |
| **கங்கைகள் மற்றும் ஏரிகள்** | - | 0.67 |
| மொத்தம் | **1,462** | **53.69** |

**நன்னீர் இறாலுக்குப் பின்னரான குடம்பி உற்பத்தி**

பம்பல மற்றும் கஹந்தமொதர, தில்லவடவனையில் அமைந்துள்ள இனப்பெருக்க நிலையத்தின் மூலம் 2015 ஆம் ஆண்டில் நன்னீர் இறாலுக்குப் பின்னரான குடம்பிகள் 25.57 மில்லியன்

உற்பத்தி செய்யப்பட்டதுடன், உரிய ஆண்டுக்குள் இடப்பட்ட அளவு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 5 - நன்னீர் இறாலுக்குப் பின்னரான குஞ்சுகளை இடல் - 2015**

| நீர் நிலைகளின் வகைகள் | நீர்நிலைகளின் எண்ணிக்கை | இடப்பட்ட குடம்பிகளின் எண்ணிக்கை (மில்லியன்) |
|---|---|---|
| **பாரிய நீர் நிலைகள்** | 20 | 8.78 |
| **நடுத்த அளவு நீர் நிலைகள்** | 36 | 6.54 |
| **சிறிய அளவு நீர் நிலைகள்** | 51 | 5.34 |
| **பருவகால நீர் நிலைகள்** | 10 | 0.14 |
| **வாவிகள்** | 43 | 0.40 |
| **ஏரிகள்** | - | 1.07 |
| மொத்தம் | **160** | **22.27** |

நீர் நிலைகளில் நன்னீர் இறால் உற்பத்தி கிரமமாக அதிகரிப்பைக் காண்பிப்பதுடன், இது மீனவர்களின் வருமானம் அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளது. நீர் நிலைகளில் நன்னீர் மீன் உற்பத்தி 2015 ஆம் ஆண்டுக்குள் சுமார் 374 மெற்றித் தொன் என்பதுடன், இதன் மூலம் கிராமிய பொருளாதாரத்திற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு சுமார் ரூபா 337 மில்லியன்களாகும். நன்னீர் இறால் நீர்நிலை சார்ந்த புதிய கடற்தொழில் கைத்தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக ஏற்றுமதி சந்தைகள் காணப்படுகின்றது. ஏற்கனவே இரு நிறுவனங்களின் நன்னீர் இறால் ஏற்றுமதி செய்யப்படுவதுடன் இதன் மூலம் 21.36, 20.68, 141 மற்றும் 144 மொ.தொன் எனத் தொடராக 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

**இலவசமாக மீன் குஞ்சுகளை வழங்கும் வேலைத்திட்டம்**

2008.07.16 ஆந் திகதி கொண்ட அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய ஐந்து வருட காலத்திற்காக மீன் குஞ்சுகளை வழங்கும் வேலைத்திட்டம் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வேலைத் திட்டத்திற்காக ரூபா 150.0 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டில் இதற்காக ரூபா 30.00 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது,

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் மீன் குடம்பிகள் மற்றும் நன்னீர் இறாலுக்குப் பின்னராக குஞ்சுகள் 29.68 மில்லியன் 2015 ஆம் ஆண்டுக்குள் நீர் நிலைகளில் இடப்பட்டன.

### நீர்த் தேக்கங்களின் மீன்பிடி முகாமைத்துவச் செயற்பாடுகள்

சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்படாத மீன்பிடி உபகரணங்கள் பயன்படுத்துவதைத் தடுத்து, நீர் நிலைகளில் நன்னீர் மீன்பிடிச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்காக எமது அதிகார சபை 2015 ஆம் ஆண்டிற்குள் 232 சுற்று வளைப்புக்கள் மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக 194 முகாமைத்துவ அனுமதிப்பத்திரங்களும், நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலுக்காக 253 படகுகள் உட்பட 900 இற்கும் மேற்பட்ட மீன்பிடி உபகரணத் தொகுதிகளும் வழங்கப்பட்டன.

### இறால் செய்கைக் கைத்தொழில்

வெள்ளைப் புள்ளி நோய் காரணமாக பாதிக்கப்பட்ட இறால் செய்கை கைத்தொழிலை மீள்கட்டமைப்பதற்காக கடந்த சில ஆண்டுகளுக்குள் பல்வேறுபட்ட வேலைத்திட்டங்கள் இறால் உற்பத்திப் பண்ணை மேற்பார்வைப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்டன. அச் செயற்பாடுகளுக்கிடையே ஒல்லாந்தர் வாய்க்காலைத் தோண்டுதல், வலயங்களாக வேறுபடுத்தல் மற்றும் செய்கை நேர அட்டவணையை அறிமுகப்படுத்தல், தேவையான கோவைகளை வகுத்தல், அமுல்படுத்தல், இறால் இனப்பெருக்க மேற்பார்வை மற்றும் இறாலுக்குப் பின்னரான குடம்பிகள் மற்றும் தாய் இறால் பரிசோதனைகளை மேற்கொள்வதும் பிரதான பணிகளாக அமைந்தன. இதற்கு மேலதிகமாக பதுலுஓயாவில் அமைந்துள்ள இறால் நோயை இனங்காணல் மற்றும் சுகாதார முகாமைத்துவ ஆய்வு கூடத்தில் இறால் செய்கையாளர்களுக்காக நோய் நிர்ணயிப்பு தொடர்பான சேவைகளும் வழங்கப்பட்டன.

நீரியல் வாழ் செய்கை முகாமைத்துவ அனுமதிப்பத்திரங்கள் 345 வழங்கப்பட்டுள்ளதுடன் இதில் 328 இறால் பண்ணையாளர்களுக்காகவும் 15 இறால் இனப்பெருக்க நிலையங்களுக்காகவும் 02 தாய் இறால் சேகரிப்பாளர்களுக்காகவும் வழங்கப்பட்டது. நெக்டா நிறுவனம் 2015 ஆம் ஆண்டுக்குள் இறாலுக்குப் பின்னரான குடம்பி மற்றும் தாய் மீன்களின் நோய்க்காக PCR பரிசோதனைகள் 4216 மேற்கொள்ளப்பட்டதுடன், பரிசோதனைகள் பத்துலுஓயாவில் அமைந்துள்ள இறால் நோய் நிர்ணய மற்றும் சுகாதார விஞ்ஞான ஆய்வுகூடத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டில் புத்தளம் மாவட்டத்தில் 42 இறால் இனப்பெருக்க நிலையங்கள் மற்றும் 608 இறால் பண்ணைகள் அமுலில் இருந்தன. உரிய ஆண்டிற்குள் இறாலுக்குப் பின்னரான குடம்பி உற்பத்தி 463 மில்லியனாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இறால் செய்கைகள் கொத்தணி செய்கைத் திட்டத்தின் கீழ் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டிருந்ததுடன், இதற்காகப் பொருத்தமான காணிகள் இனங்காணப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் செய்கையின் நிலப்பரப்பின் அளவு கிரமமாக அதிகரித்துச் செல்கின்றது.

**மட்டக்களப்பு மாவட்டத்தில் இறால் செய்கை அபிவிருத்தி.**

இவ் இனப்பெருக்க நிலையம் அரச - தனியார் தொழில் முயற்சியாளர்களின் கீழ், 2011 ஆண்டின் உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இதன் மூலம் மட்டக்களப்பு பிரதேசத்தில் இறால் செய்கைக்காகத் தேவையான பிற்காலக் குடம்பிகள் வழங்கப்பட்டன. தனியார் கம்பனிகள் இவ்வினப்பெருக்க நிலையத்தை நடாத்திச் செல்வதுடன் 2015 ஆம் ஆண்டில் 21 மில்லியன் இறால் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் விரிவடைந்த காணப்படும் இறால் செய்கை கைத்தொழிலுக்குத் தேவையான நன்னீர் இறாலுக்குப் பின்னரான குடம்பித் தேவைகளை நிவர்த்தி செய்ய கிழக்கு மாகாணத்தில் தாபிக்கப்பட்ட ஒரேயொரு இனப்பெருக்க நிலையமாகும்.

வாகரைப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்திற்குட்பட்ட குடும்பங்களுக்காக கொத்தனி முறைக்கு இறால் செய்கை மூலம் வாழ்வாதாரத்தை விருத்தி செய்யும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டது. அதிகார சபையினால் வசதிகள் வழங்கப்பட்ட மட்டக்களப்பு வாகரையில் அமைந்துள்ள கொத்தனி இறால் செய்கைப் பண்னை சூழலுக்குப் பொருத்தமான நீடித்த நிலையான, உவர் நீர்ச் செய்கைக்கான மாதிரி விவசாயப் பண்ணையாகும். பயணாளிகள் மற்றும் முதலீட்டாளர்கள், அதிகார சபை மற்றும் வாகரை பிரதேச செயலகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன் சகல பயணாளிகளுக்கும் அங்கத்துவம் வகிக்கும் நீரியில் வாழ் அபிவிருத்திச் சங்கத்தைத் தாபித்து அவ்வதிகார சபையில் பதிவு செய்யப்பட்டது. முதலீட்டு நிறுவனம் மற்றும் சங்கத்தின் பங்காளர்களாக Vakarai Ocean Aqua Cluster (Pvt) Ltd நிறுவனம் தாபிக்கப்பட்டிருந்தது. இது கொத்தனி இறால் பண்ணை Vakarai Ocean Aqua Cluster (Pvt) Ltd இன் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டுக்குள் செய்கை முறைக்காக நிறுவனத்தினால் குஞ்சுகள் ரூபா. 5.19 மில்லியன் இடப்பட்டுள்ளதுடன் 96.87 மெ.தொன் அறுவடை பெறப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு விமானப்படை முகாமில் அமைந்துள்ள இக் கண்காட்சி பண்னையினைப் பயன்படுத்தி நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச இறால் செய்கையாளர்களின் சிறந்த முகாமைத்துவப் பழக்கங்கள் மற்றும் நீடித்த நிலையான இறால் செய்கை தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தற்போது இக் கண்காட்சி விவசாயப் பண்னை மட்டக்களப்பு விமானப் படை முகாமினால் முகாமைத்துவத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டில் 0.33 மில்லியன் குஞ்சுகள் இடப்பட்டுள்ளதுடன் 5.56 மெற்றிக் தொன் அறுவடை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் 63 செய்கையாளர்களுக்குப் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

**அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செடி செய்கை**

நெக்டா நிறுவனத்தினால் மீன்களின் புதிய வகைகளை உருவாக்கல், தொழில்நுட்ப அபிவிருத்தி, தாய் மீன் வழங்கல், மீனுக்கான நோயினை அடையாளம் காணல், பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல் போன்ற வழங்குதல் போன்ற பணிகள் மூலம் அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செடிச் செய்கையைப் போன்று ஏற்றுமதிக்காக

உதவிகளும் வழங்கப்படுகின்றன. ரம்படகல்ல மற்றும் கினிகத்ஹேன ஆகிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்களில் அலங்கார மீன் மற்றும் நீரியல் வாழ் செடி செய்கை அபிவிருத்திக்குரிய பணிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. இம்மத்திய நிலையத்தின் மூலம் 2.05 மில்லியன் அலங்கார மீன் விவசாயிகளுக்கு மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு விற்பனை செய்து ரூபா 7.59 மில்லியன் ஈட்டப்பட்டது, தாய் மீன் குஞ்சி 54,420 இவ்வாண்டுக்குள் வழங்கப்பட்டுள்ளன. உரிய ஆண்டுக்குள் 18 பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்பட்டதுடன், இதன் மூலம் அலங்கார மீன் செய்கைத்துறையில் 564 பேர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

அலங்கார நீரியல் வாழ் செடிகளை நடுவதற்காக ரம்படகல மத்திய நிலையத்தில் செடிகள் நடும் ஆய்வுகூடம் தாபிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படை நோக்கமாக அமைவது தொழில்நுட்ப மற்றும் நீரியல் வாழ் செய்கை ஏற்றுமதிகள் ஊடாக அந்நிய நாட்டுச் செலாவணியினை உழைப்பதாகும். 2015 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட நீரியல் வாழ் செய்கை செடிகளின் எண்ணிக்கை 33,675 ஆகும்.

Live rock நிறுவனம் எமது உற்பத்திப் பரம்பலுக்காக புதிதாக இணைந்துள்ளதுடன், 2015 ஆம் ஆண்டில் 14.61 மில்லியன் ரூபா பெறுமதியான Live rock ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

## சம்பிரதாயமல்லாத நீரியல் வாழ் செடிச் செய்கைகள்

- **கடல் அட்டை இனப்பெருக்கம்**

  தனியார் இனப்பெருக்க நிலையத்தில் வியட்நாம் அரசின் தொழில்நுட்ப உதவியுடன் கடல் அட்டைகளின் இனப்பெருக்கத் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் கடல் அட்டைகள் 239,000 குஞ்சிகளை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

- **கடல் அட்டை செய்கை**

  கூடுகள் மற்றும் வாவிகளில் கடல் அட்டை செய்கைகளுக்காக எமது நிறுவனத்தினால் வசதிகள் வழங்கப்படுவதுடன் தனியார் துறையினால் தேவான்பிட்டி, அன்புபுரம், வலைப்பாடு, மற்றும் நாவற்குடா ஆகிய பிரதேசங்களில் கூடுகளில் கடல் அட்டை செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டில் 55 மெ.தொன் கடல் அட்டைகள் உற்பத்தியினை பெறமுடிந்துள்ளது.

- **கடல்வாழ் செடிச் செய்கை**

  வியட்நாம் அரசாங்கத்தின் தொழில்நுட்ப உதவியின் கடல்வாழ் செடி செய்கைகளை மேற்கொள்ளும் முன்னோடி செயற்திட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் மொனோலைன் (Monoline) முறையின் கீழ் கப்பசைக்கஸ் (Kappaphycus) என்ற கடல் வால் செடிச் செய்கைகளை மேற்கொள்ளும் தொழில்நுட்பம்

அறிமுகப்படுத்தப்பட்டது. ஏற்கனவே தனியார் கம்பனி வட மாகாணத்தில் பல பிரதேசங்களில் சமூகப் பங்கேற்புடன் கடல்வாழ் செடிச் செய்கைகளை ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே சுமார் 1000 செய்கையாளர்கள் கடல்வாழ் செடிச் செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர். 45 நாட்கள் செய்கைச் சுற்றின் மூலம் ஒரு குடும்பம் ரூபா 45,000 வருமானமாக ஈட்டுகின்றனர். இக் கம்பனி ஏற்கனவே ஏற்றுமதிகளையும் ஆரம்பித்துள்ளதுடன் 2015 ஆம் ஆண்டில் கடல்வாழ் செடி 165 மெ.தொன் (உலர்த்தப்பட்ட நிறை) ஏற்றுமதி செய்து 16.5 மில்லியன் ரூபா உழைத்துள்ளனர்.

- **மோதா மீன் இனப்பெருக்கம்**

அரச – தனியார் தொழில் முயற்சியாளர்களின் கீழ் மோதா மீன் இனப்பெருக்கத்தினை வெற்றிகரமாக்க முடிந்துள்ளது. தனியார் இனப்பெருக்க நிலையங்களில் மோதா மீன் இனப்பெருக்கத்திற்காக தொழில்நுட்ப உதவிகள் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டன. இது இலங்கையில் மோதா மீன் செய்கையினை விரிவுபடுத்துவதை வழிவகுக்கும். 2015 ஆம் ஆண்டில் மோதா மீன் குஞ்சுகள் 250,000 உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

- **மோதா மீன் செய்கை**

நீர்கொழும்பு வாவி, திருகோணமலை, காலி மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் மோதா மீன் செய்கையில் தனியார் தரப்பினர் ஈடுபட்டுள்ளனர். இதுவரையில் சுமார் 80 செய்கையாளர்கள் அணைக்கட்டுகள் மற்றும் கூடுகளில் மோதா மீன் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். 2015 ஆம் ஆண்டில் 327,665 குஞ்சிகள் இடப்பட்டதுடன் 36.50 மெற்றிக் தொன் மோதா அறுவடை கிடைக்கப் பெற்றுள்ளது.

04 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் பாரிய கூடுகளில் மோதா மீன் செய்கை செயற்திட்டம் தனியார் கம்பனியினால் திருகோணமலை கடற்பரப்பில் ஆரம்பிக்கப்பட்டது. வர்த்தக மட்டத்தில் கடல்சார்ந்த மீன் செய்கையை நாட்டுக்கு அறிமுகப்படுத்தும் மீன் செய்கை இதன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இச் செயற்திட்டத்தின் ஊடாக நேரடியாக தொழில் வாய்ப்புகள் உருவாகுவதன் ஊடாக கரையோர மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், இயற்கை மீன் வளர்ச்சிக்காக அழுத்தங்களை மட்டுப்படுத்தல், தொடர்ச்சியாக மீன் உற்பத்தியினை ஏற்றுமதிச் சந்தைக்கு வழங்குவதன்

கவர்ச்சியைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டில் 350,131 மோதா குஞ்சிகள் இடப்பட்டுள்ளதுடன் 20 மெ.தொன் மோதா அறுவடை பெறப்பட்டுள்ளது.

## இரணமடு நீரில் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம்

இரணமடு நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிர்மானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், இதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூபா. 386 மில்லியன் ஆகும். நன்னீர் மீன் உற்பத்தியினை அதிகரிப்பதன் மூலம் போசாக்கு மட்டம் மற்றும் கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வடமாகாணத்தின் நீர்த்தேக்கங்களுக்கு மீன் குடம்பிகளை இடுவதே இதன் நோக்கமாகும்.

## கடல் நீர் இனப்பெருக்க நிலையம் மட்டக்களப்பு

இலங்கையில் கடல்சார் மீன் செய்கையினை அபிவருத்தி செய்வதற்காகத் தேவையான கடல்சார் மீன் சினை உற்பத்தியினை நோக்காகக் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் கடல்சார் மீன் இனப்பெருக்க நிலையத்தை நிர்மானிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. இதன் நிர்மானப் பணிகள் FAO நிறுவனத்தின் நிதி ஒதுக்கீடுகளுடன் மேற்கொள்ளப்படுவதுடன் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள செலவினம் ரூபா. 120 மில்லியனாகும். வேக்கயா Milk fish *(Chanos chanos)*, மோதா Barramundi/Asian sea bass *(Lates calcarifer)*,Sea bream (*Pagrus major)*, Mahi mahi (*Coryphaena hippurus)*, Cobia *(Rachycentron canadum)* ஆகிய மீன் வகைகளை இனப்பெருக்கம் செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. கரையோரங்களில் வாழும் சுமார் 1600 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்தல், மீன் சினைகளை நாட்டில் உற்பத்தி செய்தல், ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்தல், கடல்சார் மீன் செய்கையாளர்களின் மீன் சினை செலவித்தைக் குறைந்த மட்டத்தில் பேணுவதும் மற்றும் தொழில்நுட்பத்தை வழங்குவதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## நீரியல் சார் மீன் சினை உற்பத்தி அலகினைத் தாபித்தல்

நீர்நிலைகளில் நன்னீர் கடற்தொழில் கைத்தொழிலை விருத்தி செய்வதற்கான பிரதான காரணியாக அமைந்திருப்பது மீன் சினை உற்பத்தியாகும். ஏற்கனவே மொத்த மீன் குடம்பி உற்பத்தி சுமார் 50 மில்லியன் என்பதுடன் இதில் 90% வீதமானவை நீரியல்வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்படுவதுடன் எஞ்சியவை

சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட மீன் சினை உற்பத்தி அலகுகள் மற்றும் சிறியளவு செய்கையாளர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்றன. நன்னீர் மீன் உற்பத்திக்காக சகல நன்னீர் நீர்த்தேக்கங்களுக்கும் தேவையான மீன் குஞ்சுகள் சுமார் 150 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக செய்கையினை அடிப்படையாகக் கொண்ட கடற்தொழில் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவ அமைப்புக்கள் மூலம் மீன் சினை உற்பத்திகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதுடன் நீர்நிலைகள் சார்ந்த மீன் சினை உற்பத்தி 05 அலகுகள் 05 நிரந்தர நீர்த்தேக்கங்கள் சார்ந்ததாகத் தாபிப்பதற்கு FAO நிறுவனம் 150,000 அ.டொலர் ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளது. இதன்கீழ் நீர் சார்ந்த மீன் சினை உற்பத்தி அலகுகளைத் தாபிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் பயிற்றுவிப்புக்கள், மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

## *"Aquaculture value chain development" இற்காக உபாயத் திட்டங்களை வகுத்தல்.*

உற்பத்திக்கான சந்தை மற்றும் நீரியல் வாழ் செய்கைக்காக உள்ளீடுகளை வழங்குவது பிரச்சினை என்பதினால் இலங்கையில் ***Aquaculture value chain*** அளவாகத் தாபிக்காதிருக்க அழுத்தங்கள் காணப்படுகின்றன. அறுவடை கூடுதலான காலத்தில் ஒரு சில பிரதேசங்களில் உற்பத்திகளை விற்பனை செய்வதில் சிரமங்கள் காணப்படுவதுடன் அனேகமாக செய்கையாளர்கள் தரம்கூடிய மீன் சினை மற்றும் உணவாகப் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர். இலங்கையில் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திக்காக பிரதான தடையாக அமைந்திருப்பது. *Aquaculture value chain* கிரமமான அபிவிருத்தி இன்மையாகும். சிறியளவு செய்கையாளர்கள் சந்தைக்குப் பிரவேசித்தல் மற்றும் வாடிக்கையாளர்கள் உட்பட உள்ளீடுகளை வழங்குவதை விருத்தி செய்வதற்காக தேசிய உபாயத் திட்டங்களை வகுப்பதன் மூலம் சிறியளவு செய்கையாளர்களின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு நீரியல் வாழ் செய்கை உற்பத்தியினை வழங்குவது இதன் அடிப்படை நோக்கமாகும். இச் செயற்திட்டத்திற்காக FAO நிறுவனம் 20,000 மில்லியன் அ.டொலர் நிதி ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளது.

**மீன் மரபணு மற்றும் தாய் மீன் வளர்ச்சியின் முகாமைத்துவத்திற்காக தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.**

கிராமிய செய்கையாளருக்காக தரத்தை விடக் குறைந்த மரபணு விருத்தி செய்யப்பட்ட மீன் சினைகளை வழங்குவதன் மூலம் நீரியல் வாழ் செய்கையின் நீடித்த நிலையான முன்னேற்றம் இதன் நோக்கமாகக் காணப்படுவதுடன் நிறுவனம் இதற்காக 360,000 டொலர் ஒதுக்கீடுகளை வழங்கியுள்ளது.

***உவர்நீர் இறாலுக்காக Acute Hepatopancreatic Necrosis Disease (AHPND) நோய் ஏற்படுவதற்கான ஆபத்துக்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்***

Acute Hepatopancreatic Necrosis Disease (AHPND) அல்லது பிரபல்யமடைந்துள்ள Early Mortality Syndrome (EMS) நோய் உவர் நீர் இறாலுக்காக எழுந்துள்ள நோயாக் காணப்படுகின்றது. இந் நோய் தொடர்பில் அறிவுறுத்தல் மற்றும் புதிய தகவல்களை வழங்குதல், நோயினைத் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கான அடிப்படையினை உருவாக்குதல் மற்றும் பிரயோக நிருவாகச் செயற்பாடுகளை ஏற்படுத்துவதற்காக FAO நிறுவனம் 422,000 அ.டொலர் செலவில் வலயங்களுக்கிடையிலான செயற்திட்டங்களை ஆரம்பித்தது. FAO Aquatic Animal Health (AAH) Capacity and Performance Self-Assessment ஆய்வுகள் அமுல்படுத்தப்பட வேண்டியதுடன் அறிவுறுத்தல் மற்றும் புதிய விஞ்ஞானத் தகவல்களை வழங்குவதற்காக வலயங்களுக்கிடையில் இரண்டு செயலமர்வுகள் ஜூன் 22 – 27 வரை பனாமாவில் நடாத்தப்பட்டது. இச் செயலமர்வில் இலங்கையில் நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டுத் திட்டமும் வகுக்கப்பட்டது.

நாடெங்கும் விரிவடைந்துள்ள நன்னீர் மீனவர்களின் வருமான மட்டத்தை மேம்படுத்துவதற்காக சகல சந்தர்ப்பங்களிலும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பணியாளர் சபையின் செயற்பாடுகளை அதிஉயரிய மட்டத்தில் கௌரவிப்பதுடன், அவர்கள் காண்பிக்கும் ஒத்துழைப்புகளுக்கு தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையின் நன்றி உரித்தாகிறது. அத்துடன், உணவு வழங்கும் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மாகாண சபை, நீர்நிலைகளில் கடற்றொழில் அமைப்புகளுக்காக மீன் குஞ்சுகளை வழங்குவதற்காக நிதி வழங்கி காண்பிக்கப்பட்ட ஒத்துழைப்புக்களுக்கு விசேடமாக நன்றி கூறுகிறேன். அத்துடன், நீரியல் வாழ் செய்கையாளர்கள், இறால் செய்கையாளர்கள், ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏனைய அனுசரணையாளர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக இலங்கை நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் செய்கை அபிவிருத்திக்காகக் காண்பிக்கப்பட்ட வழிகாட்டல் ஆலோசனைக்காக அதிமேன்மை தங்கிய ஜனாதிபதிக்கும், கௌரவ பிரதமருக்கும், கௌரவ கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சருக்கும், கௌரவ இராஜாங்க அமைச்சருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகார சபையின் பணிகளுக்காக தொடர்ந்தும் ஒத்துழைப்புக்களை வழங்கும் அமைச்சின் செயலாளர் மற்றும் பணியாளர்களுக்கும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பணிகளுக்காக நிதியுதவிகளை வழங்கிய பொதுத் திறைசேரியின் செயலாளருக்கும் எமது விசேட நன்றியைத் தெரிவிக்கிறோம்.

**தலைவர்**
**இலங்கை நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை**

# பணிப்பாளர் சபையின் அறிக்கை

இலங்கை தேசிய நீரியல்வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை ஆய்விற்குட்படுத்தப்பட்ட கணக்குடன் பணிப்பாளர் சபையினால் மிக மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது.

## 1. அறிமுகம்

கடற்றொழில் மற்றும் நீரியல் அமைச்சின் கீழுள்ள நீரியல் வாழ் செய்கைப் பிரிவு 1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீரியல் வாழ் அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினால் 1999 ஜனவரி மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் இலங்கை தேசிய நீரியல்வாழ் அபிவிருத்தி அதிகார சபை (நெக்டா – NAQDA) என மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் பிரதான அலுவலகம் கொழும்பு 10, ரீ.பீ. ஜாயா மாவத்தை, இலக்கம் 307 1/1 என்ற இடத்தில் வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடத்தில் தாபிக்கப்பட்டது. அது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்பு 9, பேஸ்லைன் வீதியிலுள்ள கட்டடத்திற்கு மாற்றப்பட்டதுடன், 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் பிரதான அலுவலகம் பலவத்த, பத்தரமுல்லையில் அமைந்துள்ள அதிகார சபைக்காக நிர்மாணிக்கப்பட்ட பிரதான கட்டடத்திற்கு மாற்றப்பட்டது.

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை பணிப்பாளர் சபையின் கீழ் நிறுவகிக்கப்படுகின்றது. அதிகார சபையின் பிரதானமாக நன்னீர் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி, கரையோர நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி, பரவலாக்கல், நிதி மற்றும் மானிட வள அபிவிருத்தி ஆகிய ஐந்து பிரிவினால் மற்றும் ஐந்து பணிப்பாளர்களின் வழிநடத்தலில் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

### இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி மத்திய நிலையம் - (AQDC)

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை மூலம் பிரதான நன்னீர் மீன் இனப்பெருக்க மத்திய நிலையம் (AQDC) (07), நன்னீர் இறால் இனப்பெருக்க மத்திய நிலையம் (02), அலங்கார மீன் இனப்பெருக்க மத்திய நிலையம் (02) கீழ் குறிப்பிட்டவாறு நடாத்தப்படுகின்றன.

| மத்திய நிலையம் | உற்பத்தியின் விசேடங்கள். |
|---|---|
| ➢ உடவளவ (காப்) | சாதாரண காப், இந்திய காப், சீன காப், |
| ➢ தம்புள்ள | சாதாரண காப், இந்திய காப், சீன காப், |
| ➢ இகினியாகல | சாதாரண காப், இந்திய காப், திலாபியா |
| ➢ நுவரெலியா | சாதாரண காப் |
| ➢ உடவளவ (திலாபியா) | திலாபியா விசேடம் |
| ➢ பொலன்னறுவை | இந்திய காப், சீனக் காப், திலாபியா |
| ➢ இரணமடு | சாதாரண காப், இந்திய காப், சீன காப், திலாபியா |
| ➢ பம்பல | நன்னீர் இறால் |

| | |
|---|---|
| ➢ தில்லவடவன (கஹுந்தமொதர) | நன்னீர் இறால். |
| ➢ ரம்படகல்ல | அலங்கார மீன் இனப்பெருக்க மற்றும் விருத்தியின் மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்கள் நடத்துதல். |
| ➢ கினிகத்ஹேன | அலங்கார மீன் இனப்பெருக்கம் மற்றும் செய்கை |

மேற்கூறப்பட்ட சகல மத்திய நிலையங்களிலும் நீரியல் வாழ் ஆய்வாளர்கள் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவதுடன், அவர்களது பொறுப்பாக அமைவது நாடெங்கும் அமைந்துள்ள நீர் நிலையங்களில் இடுவதற்காக தேவையான மீன் குஞ்சு உற்பத்திகளை மேற்கொள்வதாகும்.

**கலாவெவ - தேசிய நன்னீர் கடற்றொழில் மற்றும் நீரியல் வள செய்கை பயிற்சி நிறுவகம் (NIFATI)**

இந்நிறுவகம் நீரியல் வள செய்கை அதிகார சபையின் பணியாளர் சபை, நன்னீர் மீனவர்கள், மீன் செய்கையாளர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்கள், ஆர்வம் காண்பிக்கும் தரப்பினருக்காக நன்னீர் மீன்பிடி மற்றும் நீரியல் வாழ் செய்கைக்குரிய பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்காக பயிற்சி வேலைத்திட்டங்களை நடாத்த தேவையான வசதிகள் வழங்கப்படுவதுடன், நிறுவனம் உதவிப் பணிப்பாளர் (பயிற்சி) இன் கீழ் நிறுவகிக்கப் படுகின்றது.

**பரவலாக்கப் பிரிவு**

பிரதேச நீரியல் வாழ் செய்கை பரவலாக்கல் அலுவலகம் மற்றும் மாவட்ட நீரியல் வாழ் செய்கை பரவலாக்கம் அலுவலகங்கள் 22 நாடெங்கும் அமுல்படுத்தப்பட்டுள்ளன. (மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில்) பிரதேச / மாவட்ட நீரியல் வாழ் செய்கை பரவலாக்கல் உத்தியோகத்தர், பரவலாக்கல் செயற்பாடுகள், கோவைகளை அமுல்படுத்தல், நீரியல் வாழ் முகாமைத்துவம் அதாவது நீர்த்தேக்கங்களில் மீன் குஞ்சுகளை இடல், மீனவர்களை அறிவுறுத்தும் பணிகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி செயற்பாடுகளைத் தவிர்த்தலும், தொழில்நுட்பத்தை வழங்குவதற்கான செயற்பாடுகள மேற்கொள்ளுவதுமாகும்.

**2. நோக்கம்**

நெக்டா நிறுவனத்தின் பிரதான நோக்கமாக அமைவது விரிவான வழிகாட்டலின் மூலம் நீரியல் வாழ் செய்கையின் அபிவிருத்திக்குத் தேவையான கோவைகளை அமுல்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகள், பயிற்சி மற்றும் பரவலாக்கல் செயற்பாடுகள் போன்ற முறைகளுடாக இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கையின் நீடித்த, நிரந்த அபிவிருத்தியாகும். மீன் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார அபிவிருத்தி, மக்களின் போசாக்கு மட்டத்தை

மேம்படுத்தல், ஏற்றுமதி சந்தைக்கு உயரிய பெறுமதி கொண்ட மீன்களை வழங்குதல் மட்டும் தொழில்வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பத்தினை அதிகரப்பதும, வருமான மட்டத்தினை மேம்படுத்துவதன் மூலம் வறுமையைக் குறைப்பதும் நெக்டா நிறுவனத்தின் ஏனைய நோக்கமாகும்.

15/09/2011 அரச தொழில் சுற்றறிக்கை 58(2) இற்கு அமைய இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை, ஊக்குவிப்பு நிறுவகம் (Promotional Institute) என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

3. <u>2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் மனித வலு தொடர்பான தகவல்கள்.</u>

| <u>பிரிவுகள்</u> | | <u>எண்ணிக்கை</u> |
|---|---|---|
| **பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்** | | **01** |
| **சிரேஷ்ட முகாமையாளர்** | | **04** |
| **நடுத்தர மட்ட முகாமையாளர்கள்** | | **11** |
| **கனிஷ்ட மட்ட முகாமையாளர்கள்** | | **69** |
| நீரியல் வாழ் செய்கை ஆய்வாளர்கள் | 41 | |
| பிரதேச/ மாவட்ட நீரியல் வாழ் செய்கை பரவலாக்கல் உத்தியோகத்தர்கள் | 20 | |
| புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்கள் | 03 | |
| கணணிப் பகுப்பாய்வாளர்கள் | 01 | |
| நிதி உத்தியோகத்தர்கள் | 01 | |
| நிருவாக உத்தியோகத்தர்கள் | 01 | |
| பெறுகை உத்தியோகத்தர்கள் | 01 | |
| சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் | 01 | |
| **முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்** | | **87** |
| நீரியல் வாழ் செய்கை உதவியாளர் | 16 | |
| நீரியல் வாழ் செய்கை பரவலாக்கல் உத்தியோகத்தர்கள் | 67 | |
| தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்கள் | 03 | |
| புத்தகம் பேணுனர்கள் | 01 | |
| **முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பமல்லாத** | | **71** |
| **ஆரம்ப மட்டம்** | | **324** |
| மின்சாரம் / இயந்திர தொழில்நுட்பம் | 07 | |
| சாரதி | 42 | |
| நோயாளர் உதவியாளர் | 275 | |
| **மொத்தம்** | | **567** |

## 4. பிரதான பணிகள்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான பணியாக அமைவது நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் நன்னீர் மீன் பயன்பாட்டினை அதிகரிப்பதாகும். தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல், நீரியல் வளம் சார்ந்த உற்பத்தி நிறுவன அளவினை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு இலங்கையின் நீரியல் வாழ் வளம் மற்றும் நீரியல் செய்கை கைத்தொழிலின் நீடித்த நிரந்தர அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்தை மேற்கொள்வதாகும்.

## 5. மூலதனம்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை 100% திறைசேரி மூலம் மூலதன முதலீடுகளை மேற்கொள்ளும் அரச நிறுவனமாகும். இதன் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை மூலதனம் 90 மில்லியன் ரூபா ஆகும்.

## 6. வருமானம்

மீன் குஞ்சு விற்பனை, மத்திய நிலையத்தை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் ஏனைய வருமானமாக அதிகார சபை பெற்றுள்ள வருமானம் 147.53 மில்லியன் ரூபாவாகும். 2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான மீண்டெழும் செலவினத்தை தீர்ப்பதற்காக பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்ட நிதியின் அளவு 313.09 மில்லியன் ரூபாவாகும்.

## 7. அதிகார சபையின் செயற்பாடுகள்

2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை தேசிய நீரியல் வள செய்கை அபிவிருத்தி அதிகார சபை ரூபா 11.44 மில்லியன் தேறிய நட்டம் பெறப்பட்டுள்ளது. வருமான விபரங்கள் பக்கம் இலக்கம் 25 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 8. பணிகள் தொடர்பான செயற்பாடுகள்

2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அதிகார சபையின் ஐந்தொகை 22 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 9. மூலதனச் செலவீனம்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி சபைக்காக 2015 ஆம் ஆண்டு ரூபா 100.0 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முழுமையாக ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டது மத்திய நிலையங்களிலுள்ள கட்டடங்கள் மற்றும் வாவிகளை புனரமைப்பதற்கும், சுத்தப்படுத்துவதற்குமாகும்" நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், வாகனம் மற்றும் உபகரணங்கள் போன்ற அமைப்புக்களும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்திப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

## 10. ஏனைய முகவர் நிறுவனங்களுடனான தொடர்புகள்

சுனாமிக்குப் பின்னர் கரையோர புனரமைப்பு மற்றும் வள முகாமைத்துவ வேலைத்திட்டமும் சுனாமிக்குப் பின்னர் வாழ்வாதார அபிவிருத்தி உட்பட ஒத்துழைப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் கீழ் நீரியல் வாழ் செய்கைத் துறையின் அபிவிருத்திக்காக விசேட செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக மற்றும் தனியார் துறையுடன் இணைந்து உவர் நீர் இறால் இனப்பெருக்கம், மாதிரி இறால் பண்ணை, வாகரைப் பிரதேசத்தில் கொத்தணி முறைக்கு இறால் செய்கைக்காக உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி, மேலும் வியட்நாம் அரசு, கடல் வாழ் சொடி செய்கை, கடல் வெள்ளரி இனப்பெருக்கம் மற்றும் செய்கைகள் உட்பட கடல் அட்டைகளை இடுவதற்காக தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

## 11. நிறுவனத்தால் எட்டப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் தலையீடுகள்.

2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக அதிகார சபையின் பணியாளர் சபை அங்கத்தவர்கள் நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்திற்காக நேரடி மற்றும் மறைமுக தலையீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 12. கணக்காய்வாளர்

2015 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காக இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையில் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது அரச கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலமாகும்.

# இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

## ஐந்தொகை

| | குறிப்பு | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 4 | 823,778,666.93 | 630,849,630.19 |
| இனப்பெருக்கச் செயற் பாடுகள் மற்றும் வர்த்தகச் சொத்துக்கள் | 5 | 285,364,959.02 | 133,074,104.93 |
| முடிவுறா மூலதனப் பணிகள் | | 17,463,020.30 | 47,187,303.03 |
| உயிரியல் இருப்பு | | 99,950.00 | 99,950.00 |
| | | 1,126,706,596.25 | 811,210,988.15 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்பு | 6 | 27,383,281.52 | 22,876,016.69 |
| வைப்பு, முற்பணம் மற்றும் முற்கொடுப்பணவு | 7 | 3,179,337.56 | 2,989,487.93 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள் | 8 | 65,375,846.72 | 37,938,286.82 |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | 9 | 49,268,312.68 | 11,591,440.47 |
| | | 145,206,778.48 | 75,395,231.91 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 1,271,913,374.73 | 886,606,220.06 |
| **உரிமை மற்றும் பொறுப்புரிமைகள** | | | |
| **உரிமை** | | | |
| மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள் | | | |
| திறைசேரி மூலதன வழங்கல் | | 158,514,594.24 | 207,003,656.89 |
| தேக்கி வைக்கப்பட்ட உழைப்பு | | (189,882,491.62) | (205,564,085.89) |
| | | 17,400,000.00 | 17,400,000.00 |
| **மொத்த உரிமை** | | (13,967,897.38) | 18,839,571.00 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய பணிக் கொடை கடப்பாடுகள | 10 | 70,918,812.89 | 53,562,763.88 |
| தளம்பல் வருமானம் | 11 | 1,091,547,414.97 | 702,648,721.18 |
| அரச வழங்கல் செயற்திட்டம் (2006 வரவு செலவுத் திட்டம்) | | 54,040,042.00 | 54,040,042.00 |
| | | 1,216,506,269.86 | 810,251,527.06 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 12 | 45,340,944.08 | 35,584,124.16 |
| ஒப்பந்த அடிப்படையில் நிலைப்படுத்தல். | | 24,034,058.16 | 21,930,997.83 |
| | | 69,375,002.24 | 57,515,121.99 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | 1,285,881,272.10 | 867,766,649.05 |
| **மொத்த உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள்** | | 1,271,913,374.73 | 886,606,220.06 |

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

## நிதிப்பாய்ச்சல் கூற்று

| | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|
| ***செயற்பாடுகள் மீதான நிதிப் பாய்ச்சல்*** | | |
| தேறிய இலாபம் / நட்டம் | 11,443,032.45 | (26,327,841.81) |
| ஒப்பீடுகள் | | |
| தேய்மானம் - நிலையான சொத்து | 35,609,628.64 | 33,768,364.43 |
| தேய்மானம் - இனப்பெருக்க உதவி | 25,526,354.64 | 24,571,238.26 |
| அறவிடமுடியாக்கடன் | 1,554,649.14 | 1,057,742.08 |
| பணிக்கொடை ஒதுக்கீடு | 18,698,933.01 | 14,422,874.81 |
| முன்னைய ஆண்டின் ஒப்பீடு | 4,238,561.82 | - |
| சொத்து விற்பனை மீதான இலாபம் | (4,694,898.00) | (3,260,187.96) |
| தழம்பல் கடன் | (61,135,983.56) | (58,339,602.69) |
| செயற்பாட்டு இலாபம், செயற்பாட்டு மூலதன ஒப்பீட்டுக்கு முன்னர் | 31,240,278.42 | (14,107,412.88) |
| (அதிகரிப்பு / குறைவு) இருப்பு | (4,507,264.83) | (9,202,275.95) |
| (அதிகரிப்பு / குறைவு) முற்பணம் மற்றும் முற்கொடுப்பணவு | (189,849.63) | 3,267.69 |
| (அதிகரிப்பு/குறைவு) கடன்படுனர் மற்றும் ஏனைய கிடைப்பணவு | (28,992,209.04) | (2,023,278.14) |
| (அதிகரிப்பு / குறைவு) ஒப்பந்தத்திற்கு அமைய தேக்கி வைக்கப்பட்ட கிடைப்பணவுகள் | 2,103,060.33 | 9,633,615.99 |
| (அதிகரிப்பு / குறைவு) வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 9,756,819.92 | 293,833.56 |
| செயற்பாட்டுப் பணிகள் மூலம் உழைக்கப்பட்ட நிதி | 9,410,835.00 | (15,402,249.73) |
| பணிக்கொடை கொடுப்பணவு | (1,342,884.00) | (2,091,771.75) |
| செயற்பாட்டுப் பணிகள் மூலம் தேறிய நிதிப்பாய்ச்சல் | **8,067,951.17** | **(17,494,021.48** |
| ***முதலீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நிதிப் பாய்ச்சல்*** | | |
| சொத்து ஆதனங்கள் மற்றும் கொள்வனவு | (57,622,956.66) | (27,226,672.84) |
| முடிவுறா மூலதனப் பணிகள் | (17,463,020.30) | (47,187,303.03) |
| முதலீடு | - | - |
| சொத்துக்கள் ஆதனங்களை அகற்றுதல் | 4,694,898.00 | 3,288,990.98 |
| முதலீட்டுச் செயற்பாடுகள் மீதான தேறிய நிதிப்பாய்ச்சல் | (70,391,078.96) | (71,124,984.89) |
| ***நிதி செயற்பாடுகள் மீதான நிதிப்பாய்ச்சல்*** | | |
| மூலதன ஒதுக்கீட்டுக் கிடைப்பணவு (திறைசேரி) | 100,000,000.00 | 95,000,000.00 |
| வருமான வரிக் கொடுப்பணவு | - | - |
| நிதி செயற்பாடுகள் மீதான தேறிய நிதிப்பாய்ச்சல் | **100,000,000.00** | **95,000,000.00** |
| நிதி, நிதிக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / குறைவு | **37,676,872.21** | **6,380,993.63** |
| ஆண்டின் ஆரம்ப நிதியிடல், நிதிக்கு சமமானவைகளின் பெறுமதி | 11,591,440.47 | 5,210,446.84 |
| ஆண்டின் இறுதியில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் பெறுமதி | **49,268,312.68** | **11,591,440.47** |
| ***நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் விளக்கம்*** | | |
| ஆண்டு இறுதியில் | 49,268,312.68 | 11,591,440.47 |
| வங்கி நிலுவை | - | - |
| வங்கி நிலுவை (கையிலுள்ள நிதி) | 49,268,312.68<br>- | 11,591,440.47- |
| வங்கிப்பற்று | **49,268,312.68** | **11,591,440.47** |

## இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

### உரிமை மாற்றல் வெளிப்பாடுகள்

| | அரச வழங்கல் | | சொத்து மீள் மதிப்பீடு | தேக்கி வைக்கப்பட்ட உழைப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | மீண்டெழும் | மூலதனம் | | | |
| 2014.01.01ம் திகதி அன்று நிலுவை | - | 139,230,239.73 | 17,400,000.00 | (179,236,244.07) | (22,605,914.34) |
| அரச வழங்கல் | 215,200,000.00 | 95,000,000.00 | - | - | 310,200,000.00 |
| தளம்பல் வருமானத்திற்கு மாற்றுதல் (2014 ஆம் ஆண்டு உட்பட) | - | (27,226,672.84) | 0.00 | - | (27,226,672.84) |
| இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றுதல் | (215,200,000.00) | - | - | - | (215,200,000.00) |
| ஆண்டின் தேறிய இலாபம் / நட்டம் | - | - | - | (26,327,841.81) | (26,327,841.81) |
| **2014.12..31ம் திகதியன்று நிலுவை** | **-** | **207,003,656.89** | **17,400,000.00** | **(205,564,085.89)** | **18,839,571.00** |
| | | | | | |
| 2015.01.01 ஆம் திகதி அன்று நிலுவை | - | 207,003,656.89 | 17,400,000.00 | (205,564,085.89) | 18,839,571.00 |
| அரச வழங்கல் - மீண்டெழும் மற்றும் கூலதனம் | 313,090,250.00 | 100,000,000.00 | 0.00 | - | 413,090,250.00 |
| அரச வழங்கல் - இரணமடு இனப்பெருக்க மத்திய நிலயை நிர்மானிப்பு | - | 280,780,717.39 | 0.00 | - | 280,780,717.39 |
| நிதியல்லாத அரச வழங்கல்கள் | - | 30,760,000.00 | 0.00 | - | 30,760,000.00 |
| தளம்பல் வருமானத்திற்கு மாற்றுதல் (2014 ஆம் ஆண்டுக்குரிய) | - | (460,029,780.04) | 0.00 | - | (460,029,780.04) |
| இலாப நட்டக் கணக்கிற்கு மாற்றுதல் | (313,090,250.00) | - | - | - | (313,090,250.00) |
| முன்னைய ஆண்டின் ஒப்பீடுகள் | 0.00 | - | - | 4,238,561.82 | 4,238,561.82 |
| ஆண்டின் தேறிய இலாபம் / நட்டம் | - | - | - | 11,443,032.45 | 11,443,032.45 |
| **2015.12.31ம் திகதியன்று நிலுவை** | **-** | **158,514,594.24** | **17,400,000.00** | **(189,882,491.62)** | **(13,967,897.38)** |

## இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை

### வருமானக் கூற்று

| | குறிப்பு | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|---|
| வருமானம் | | 95,585,212.24 | 57,134,456 |
| மீன் இனப்பெருக்கச் செயற்பாடுகளின் செலவினம் | 13 | (83,002,781.06) | (60,305,736) |
| தேறிய நட்டம் | | **12,582,431.18** | **(3,171,279)** |
| ஏனைய வருமானம் | 14 | 51,941,769.97 | 43,320,266 |
| அரச வழங்கல் (மீண்டெழும்) | | 313,090,250.00 | 215,200,000 |
| | | **377,614,451.15** | **255,348,987** |
| நிறுவனம் மற்றும் நிர்வாகச் செலவினம் | 15 | (389,847,289.79) | (297,409,554) |
| விநியோக செலவினம் | 16 | (47,361,304.63) | (42,539,557) |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | 17 | (93,910.53) | (67,321) |
| | | **(437,302,504.95)** | **(340,016,432)** |
| தளம்பல் வருமான ஒப்பீட்டுக்கு முன்னர் தேறிய நட்டம் | | **(59,688,053.80)** | **(84,667,444)** |
| தளம்பல் வருமானம் | 10 | **71,131.,086.25** | **58,339,603** |
| **தேறிய நட்டம்** | | **11,443,032.45** | **(26,327,842)** |

# கணக்கீட்டுக் குறிப்புக்கள்

## 1. நிலையியற் சபைத் தகவல்கள்

### 1.1 பொதுவான விடயங்கள்

இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் 1998 இலக்கம் 53 கொண்ட சட்டத்தின் மூலம் கடற்தொழில் மற்றும் நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அமைச்சின் முழுமையான மேற்பார்வையுடன் தாபிக்கப்பட்டுள்ளது. பிரதான அலுவலகம் இலக்கம் 41/1, புதிய பாராளுமன்ற வீதி, பலவத்த, பத்தரமுல்ல என்ற இடத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் வர்த்தகத்தின் தன்மைகள்

உரிய ஆண்டில் பிரதான செயற்பாடுகளாக அமைவது மீன் சினைகளை விற்பனை செய்வதாகும்.

## 2 சமர்ப்பிப்பதற்கான அடிப்படைகள்

கணக்கீட்டு அறிக்கைகள் வரலாற்றுச் செலவினத்தின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்குள் சொத்துக்களின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ஒப்பீடு மற்றும் பணவீக்க செயற்சாதனைகளுக்காக ஒப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.1 கணக்கீட்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

அதிகார சபையின் கணக்கறிக்கைகள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை மற்றும் அதிகார சபையினால் தாபிக்கப்பட்ட 1998 இலக்கம் 53 கொண்ட இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் தேவை மற்றும் 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.2 ஒப்பீட்டுத் தகவல்கள்

அதிகார சபையினால் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ந்தும் பதிலீடு செய்யப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட கொள்கைகளுடன் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## 3 கணக்கீட்டுக் கொள்கைப் பயன்பாடுகள் தொடர்பான சுருக்கம்

### *3.1 வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள்*

வர்த்தகச் செயற்பாடுகள் மூலம் கிடைக்க வேண்டிய அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடன் ஒப்பீடுகளுக்கு முன்னர் தேறிய பெறுமதி காண்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய கிடைக்க வேண்டியவைகள் செலவினத்திற்கமைய இனங்காணப்பட்டுள்ளது.

### *3.2 நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்*

நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள் கையிலுள்ள நிதியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

### *3.3 சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்*

காணியைத் தவிர ஏனைய சொத்து செலவினத்தின் திரண்ட தேய்மானத்தைக் குறைத்து தேறிய பெறுமானம் காண்பிக்கப்பட்டுள்ளது. சொத்துக்களின் ஆயுட்காலம் வரை குறுகிய முறைகள் ஊடாக தேய்மானம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தேய்மான விகிதாசாரம் கீழே குறிப்பிடப்பட்டவாறு அமைகின்றது.

| | |
|---|---|
| கட்டிடங்கள் மற்றும் நிர்மானிப்பு | 4% |
| வாகனம் | 20% |
| தளபாடம் மற்றும் அலுவலகம் | 10% |
| இரசாயன கூட உபகரணங்கள் | 10% |
| இயந்திரங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் | 10% |
| இனப்பெருக்க நிலைய உபகரணங்கள் | 10% |
| மீன் தடாகங்கள் | 10% |
| மீன் வாவிகள் | 6% |
| உபகரணங்கள் மற்றும் பாகங்கள் | 10% |
| கணணி மற்றும் தகவல் பரிமாற்றல் உபகரணங்கள் | 20% |
| கணணி மென்பொருள் | 10% |

<u>*குறிப்பு*</u>

அதிகார சபையின் 6.8799 ஹெக்டேயர் காணி நிலையான சொத்தாகப் பெறப்படாதிருப்பது மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள போதிலும் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் மீள் மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கவில்லை என்பதனாலாகும்.

### 3.4 ஐயக்கடன்

ஆண்டின் இறுதியில் கடன்படுனர் நிலுவையில் 10% ஐயக்கடனுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது

### 3.5 இருப்பு

தொகைச் செலவினம் அல்லது தேறிய திரண்ட பெறுமதியிலிருந்து குறைந்த பெறுமதிக்கு கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.6 ஓய்வூதியப் பணிக்கொடை

<u>பணிக்கொடை கொடுப்பனவினை வரைவிலக்கணப்படுத்தல்</u>

பணிக்கொடை கணிப்பீடு செய்யப்பட்டிருப்பது சேவைக்கு இணைந்த தினம் தொடக்கம் ஆண்டுக்கு ½ மாதங்களுக்குள் சம்பளத்தின் அடிப்படையிலாகும். இருப்பினும் 1983 இலக்கம் 12 கொண்ட பணிக்கொடை சட்டத்திற்கமைய அதிகார சபையின் 5 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் பணிக்கொடையினை பெற்றுக் கொள்வதற்காக சட்ட ரீதியிலான கட்டுப்பாடுகள் உள்ளன.

<u>பங்காளர் திட்டங்களை வரைவிலக்கணப்படுத்தல் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியம்</u>

ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்வது கட்டாயம் என்பதுடன் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்குரிய கோவைக்கமைய மேற்கொள்ளப்படுகின்றது. அதிகார சபையின் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்கு தொடராக மொத்த தேறிய உழைப்பிலிருந்து 15% மற்றும் 3% பங்களிப்பு செய்யப்படுகின்றது.

### 3.7 வருமானத்தை இனங்காணுதல்

கிடைக்க வேண்டிய மற்றும் பெறப்பட்ட வருமானங்கள் நியாயமான பெறுமதிக்கமைய கருத்தில் கொண்டு வருமானமாக கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.8 செலவினத்தை இனங்காணுதல்

வருமான வெளிப்பாட்டில் செலவினமாக இனங்காணப்பட்டிருப்பது அவ்வவ் வருமான உழைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செலவினமாகும். சகல உற்பத்தி செயற்பாடுகளுக்காகவும் மேற்கொள்ளப்படும் செலவினம் மற்றும் சொத்துக்கள், ஆதனங்கள், உபகரணங்களின் வினைத்திறன் உட்பட பயன்பாட்டிற்காக பராமரிப்பு வருமானத்திற்கு அறவீடுகள் மூலம் ஆண்டிற்குரிய இலாபம் / நட்டப் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

# இலங்கை தேசிய நீரியல்வாழ் செய்கை அபிவிருத்தி அதிகார சபை
## 2015 டிசம்பர் 31ம் திகதியன்று நிலையான சொத்துக்கள்

**சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்**

| செலவினம் | 2015.01.01ம் திகதி நிலுவை | ஆண்டுக்குள் சேகரிப்பு | ஆண்டுக்குள் நீக்குதல் | 2015.12.31ம் திகதியன்று நிலுவை |
|---|---|---|---|---|
| காணி | 146,411,854.00 | - | - | 146,411,854.00 |
| கட்டிடம் மற்றும் நிர்மானிப்பு | 381,773,586.07 | 181,933,712.98 | - | 563,707,299.05 |
| கட்டிடம் மற்றும் நிர்மானிப்பு (ADB) | 206,460,717.00 | - | - | 206,460,717.00 |
| கட்டிடம் மற்றும் நிர்மானிப்பு (புதிய கட்டிடம்) | 3,184,404.00 | - | - | 3,184,404.00 |
| தளபாடம் மற்றும் அலுவலகம் | 32,654,981.22 | 7,359,124.95 | - | 40,014,106.17 |
| தளபாடம் மற்றும் அலுவலகம் (ADB) | 4,911,820.00 | - | - | 4,911,820.00 |
| இரசாயண கூட உபகரணம் | 10,137,482.80 | 3,536,535.90 | - | 13,674,018.70 |
| இயந்திரம் மற்றும் ஏனைய உபகரணம் | 22,518,850.66 | 4,017,603.00 | - | 26,536,453.66 |
| நுகர்வோர் பொருட்கள் மற்றும் பல்வேறு உபகரணங்கள் | 10,137,648.96 | - | - | 10,137,648.96 |
| உபகரணங்கள் மற்றும் பாகங்கள் | 1,573,467.00 | - | - | 1,573,467.00 |
| வாகனம் | 56,628,401.91 | 30,919,741.95 | 3,287,300.00 | 84,260,843.86 |
| வாகனம் (ADB) | 38,833,274.00 | - | 639,370.00 | 38,193,904.00 |
| கணனி மற்றும் தகவல் பரிமாற்றல் உபகரணங்கள் | 8,755,954.99 | 2,118,700.00 | - | 10,874,654.99 |
| கணனி மென்பொருள் | 1,155,625.00 | - | - | 1,155,625.00 |
| | **925,138,067.61** | **229,885,418.78** | **3,926,670.00** | **1,151,096,816.39** |

| தேய்மானம் | 2015.01.01ம் திகதி நிலுவை | ஆண்டுக்குள் தேய்மானம் | ஆண்டுக்குள் தேய்மான அகற்றுதல் மற்றும் ஒப்பீடுகள் | 2015.12.31ம் திகதியன்று நிலுவை |
|---|---|---|---|---|
| காணி | - | - | - | 0.00 |
| கட்டிடம் மற்றும் நிர்மானிப்பு | 105,005,753.67 | 15,270,943.45 | - | 120,276,697.12 |
| கட்டிடம் மற்றும் நிர்மானிப்பு (ADB) | 49,550,572.08 | 8,258,428.68 | - | 57,809,000.76 |
| கட்டிடம் மற்றும் நிர்மானிப்பு (புதிய கட்டிடம்) | 3,184,404.00 | - | - | 3,184,404.00 |
| தளபாடம் மற்றும் அலுவலகம் | 18,982,859.60 | 2,415,814.61 | - | 21,398,674.21 |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம் (ADB) | 2,947,092.00 | 491,182.00 | - | 3,438,274.00 |
| இரசாயண கூட உபகரணம் | 6,864,963.32 | 577,826.45 | - | 7,442,789.77 |
| இயந்திரம் மற்றும் ஏனைய உபகரணங்கள் | 14,808,057.72 | 1,346,753.40 | - | 16,154,811.12 |
| நுகர்வுப் பொருட்கள் மற்றும் பல்வகை உபகரணங்கள் | 7,344,422.14 | 860,934.62 | - | 8,205,356.76 |
| உபகரணங்கள் மற்றும் பாகங்கள் | 1,573,001.29 | 466.00 | - | 1,573,467.29 |
| வாகனம் | 39,462,692.93 | 6,350,871.36 | 3,287,300.00 | 42,526,264.29 |
| வாகனம் (ADB) | 38,833,274.00 | - | 639,370.00 | 38,193,904.00 |
| கணனி மற்றும் தகவல் பரிமாற்றல் உபகரணம் | 5,388,996.46 | 1,271,761.47 | - | 6,660,757.93 |
| கணனி மென்பொருள் | 342,348.22 | 111,400.00 | - | 453,748.22 |
| | **294,288,437.42** | **36,956,382.04** | **3,926,670.00** | **327,318,149.46** |
| எழுதப்பட்ட பெறுமதிகள் | **630,849,630.19** | | | **823,778,666.93** |

**இனப்பெருக்கச் செயற்பாட்டுக்குரிய சொத்துக்கள்**

| செலவினம் | 2015.01.01ம் திகதியன்று நிலுவை | ஆண்டுக்குள் சேகரிப்பு | ஆண்டுக்குள் நீக்குதல் | 2015.12.31ம் திகதியன்று நிலுவை |
|---|---|---|---|---|
| இனப்பெருக்க உபகரணங்கள் | 12,283,745.87 | 3,775,712.56 | - | 16,059,458.43 |
| இனப்பெருக்க உபகரணங்கள் (ADB) | 84,246,743.00 | - | - | 84,246,743.00 |
| மீன் தடாகம் | 28,781,971.19 | 11,829,342.29 | - | 40,611,313.48 |
| மீன் வாவி | 225,993,310.20 | 160,865,400.00 | - | 386,858,710.96 |
| | **351,305,770.26** | **176,470,455.61** | **-** | **527,776,225.87** |

| தேய்மானம் | 2015.01.01ம் திகதியன்று நிலுவை | ஆண்டுக்குள் தேய்மானம் | ஆண்டுக்குள் தேய்மான நீக்குதல் மற்றும் ஒப்பீடுகள் | 2015.12.31ம் திகதியன்று நிலுவை |
|---|---|---|---|---|
| இனப்பெருக்க உபகரணங்கள் | 6,186,364.95 | 799,029.09 | - | 6,985,394.04 |
| இனப்பெருக்க உபகரணங்கள் (ADB) | 33,698,697.20 | 8,424,674.30 | - | 42,123,371.50 |
| மீன் தடாகம் | 8,477,342.80 | 2,708,851.52 | - | 11,186,194.32 |
| மீன் வாவி | 169,869,260.38 | 12,247,046.61 | - | 182,116,306.99 |
| | **218,231,665.33** | **24,179,601.52** | **-** | **242,411,266.85** |
| எழுதப்பட்ட பெறுமதிகள் | **133,074,104.93** | | | **285,364,95** |

# கணக்காய்வாளர் அறிக்கை

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்புகள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் பற்றி கணக்காய்வாளர் அறிக்கை.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

15

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | எப்எல்எஸ்/ஏ/என்ஏ<br>கிவ்டீஏ/1/15/08 | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2016 நவம்பர் 30 |

தலைவர்,

இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபை

**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

